IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No. 598/2019

Deposition of Witness PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தில்குமார் | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2025

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை

நான் மொடக்குறிச்சி ஆலங்காட்டு வலசுவில் வசித்து வந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். 03.03.2012 அன்று மணி என்பவர் கரியா கவுண்டன் வலசுவில் வைத்திருக்கும் கிரி பிரசாத் டிரேடர்ஸ் நிறுவனத்திலிருந்து, 110 மூட்டை பருத்திக்கொட்டை, புண்ணாக்குகளை எனது TN 33 B 5822 லாரியில் ஏற்றிக்கொண்டு கோயம்புத்தூரில் உள்ள KR டிரேடர்ஸ் கிருஷ்ணன் என்பவரிடம் கொண்டு சென்று ஒப்படைத்தேன். அதை அவர் பெற்றுக் கொண்டார். பின்னிட்டு 15 நாட்கள் கழித்து கிரி பிரசாத் நிறுவனத்தில் இருந்து கே ஆர் டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு நான் மீண்டும் சரக்குகளை எடுத்துச் சென்று கொடுத்து

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.11.12 18:36:53 +0530

விட்டு வந்தேன். கிரி பிரசாத் டிரேடர்ஸ் நிறுவனத்திலிருந்து கே.ஆர் ட்ரேடர்ஸ் நிறுவனத்திற்கு சரக்குகளை எடுத்துச் செல்வதற்காக வழங்கப்பட்ட ரசீதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அது ஏற்கனவே அ.சா.ஆ.4 முதல் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** அதன் பிறகு கே ஆர் ட்ரேடர்ஸ் கிருஷ்ணன் என்பவர் போலி காசோலை கொடுத்து ஏமாற்றி விட்டதாக மணி என்பவர் என்னிடம் கூறினார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் ஒன்பதாம் வகுப்பு படித்துள்ளேன். நான் பாலசுப்பிரமணியம் நிறுவனத்தில் டிரைவராக பணிபுரிந்து வருகிறார் என்றால் இல்லை சொந்தமாக லாரி வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் சொந்தமாக லாரி வைத்திருப்பதற்கோ அல்லது டிரைவர் வேலை செய்வதற்கோ ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.பாலசுப்பிரமணியம் நிறுவனத்திற்கும் எதிரிக்கும் நடந்த வரவு செலவு குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் போலீசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றான் சரியல்ல. ரசீதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2025.11.12 18:36:38 +0530